புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==================================================================

# பெண் எழுத்தாளர்களின் நாவல்களில் ஆண் குறித்த மன உணர்வுகளும் வெளிப்பாடுகளும்

மா. நிஷா
பதிவு எண் : 19213114022030
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்.

முனைவர் அ. லதா மகேஸ்வரி
நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ தேவிகுமாரி மகளிர் கல்லூரி, குழித்துறை.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

==================================================================

ஆய்வுச்சுருக்கம்

பெண் எழுத்தாளர்களின் நாவல்களில் ஆண் பற்றிய மன உணர்வுகளையும் வெளிப்பாடுகளையும் உணர்த்தும் வகையில் அகிலாவின் ‘தவ்வை’ உமா மகேஸ்வரியின் ‘யாரும் யாருடனும் இல்லை, ஆண்டாள் பிரியதர்ஷினியின் ‘தகனம்’, சல்மாவின் ‘இரண்டாம் ஜாமங்களின் கதை’, திலகவதியின் ‘கல்மரம்’, தமயந்தியின் ‘முற்பகல் ராஜ்ஜியம்’ ஆகிய ஆறு நாவல்களின் வழியாக மனஉணர்வுகளும் வெளிப்பாடும், ஆண் என்கிற தன்முனைப்பு, இளம் விதவையர்கள், தாய்மனச்சிக்கல் என்னும் தலைப்புகளில் ஆய்வு மேற்கொண்டு ஆண்களின் மனஉணர்வுகளையும் அதனால் பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகளையும் வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

## முன்னுரை

எழுத்து அனைவருக்கும் பொதுவானது எனினும் பெண்ணின் பார்வையில் பிறக்கும் எழுத்து தனித்துவமான ஒன்றே. எழுத வந்த பெண்கள் அனைவருமே புரட்சியை விதைத்தார்கள் என்று சொல்லிவிட முடியாதுதான். ஆனால் அடக்கு முறையிலும் குழந்தை திருமணத்திலும், சாதிக் கொடுமையிலும் கலாச்சாரச் சிறைக்குள்ளும் சிக்கிக் கொண்டிருந்த காலத்தில் பெண்கள் எழுத வந்ததே மாபெரும் புரட்சி எனலாம். எழுதுகின்றவர்களும் அவற்றைப் படிக்கின்றவர்களும் ஆண்களாக மட்டுமே இருந்த காலத்தில் எழுத்தைத் தங்கள் அடையாளமாகக் கொண்ட பெண்கள் பெரும்பாலும் குடும்ப அமைப்பு சார்ந்த புனைவுகளையே எழுதினார்கள். இவர்களுக்கு அடுத்து வந்த தலைமுறைக்குக் கல்வியறிவு சாத்தியப்பட்டது. அது அவர்களின் சிந்தனையை விரிவடையச் செய்தது.

சமையலும் குடும்பமும் மட்டுமே பெண்களின் உலகமாக இருந்த கதைக்களன் மாறி, குடும்ப வன்முறைகளையும் சமூக அவலங்களையும் தங்கள் கதைகளின் கருக்களாகக் கொண்டனர். இது சமூகத்தின் பார்வையை மாற்றவும் பெண்களை ஆண்கள் புரிந்து கொள்வதற்குமான சாத்தியங்களை ஏற்படுத்திக் கொடுத்தன. எனினும் ஆண்டுகள் பல கழிந்தும் பெண்மீதான வன்முறைகள் குறையவில்லை. சமூகமும் சாதகமாக அமையவில்லை. இதன் காரணமாகத்தான் பேசித்தீராத விஷயங்களை மீண்டும் வலியுறுத்த வேண்டிய நிலை உருவாகின்றன. எனவேதான் பெண் எழுத்தாளர்கள் பெண் வன்முறைகள் குறித்த கருத்துக்களைப் படைப்புகளின் வாயிலாக முன்வைக்கின்றனர் என்றே கூறலாம்.

*நாவல்களில் உணர்வுகளும் வெளிப்பாடும்*

*நாவல்கள் சமூக ஆவணங்களாக விளங்குகின்றன. சமூக நாவல்கள் வாழ்க்கையைச் சித்தரிப்பதால் அவற்றின் தனி மனித உணர்வுகளும் வெளிப்பாடுகளும் உளவியல் அடிப்படையில் அமைய வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன.*

*நாவல்கள் சமுதாயத்துடன் எவ்வளவு தொடர்புடையனவோ அவ்வளவுக்கவ்வளவு உளவியலுடனும் இயல்பான தொடர்புடையன எனலாம். மனிதனுடைய இலட்சியம், அவனது வாழ்க்கையின் நிகழ்வு உண்மைத்திறன் ஆகியவற்றிற்கு இடையே ஏற்படுகின்ற முரண் போராட்டமாக அமைகின்றது. உடல் தேவைகளோ, பொருளாதாரத் தேவைகளோ நிறைவுறுவதால் மட்டும் உள்ளம் நிறைவுற்றுவிடுவதில்லை. பிறர் தம்மை மதிக்க வேண்டும் எனவும் விரும்புகின்றனர். அவர்களது அனுபவங்களையும், அந்தரங்கங்களையும் பகிர்ந்துகொள்ள நெருங்கிய நட்பு தேவைப்படுகின்றது. அவர்கள் பிறரது கவனத்தையும் அன்பையும் பெறவும், தரவும் விரும்புகின்றனர். பெண்கள் தாங்கள் ஒடுக்கப்பட்டுள்ளதை உணர்ந்து அதை மாற்ற வேண்டும் என்ற விழிப்புணர்வோடு மன உணர்வுகளை நாவல்களில் தங்கள் மொழிநடையிலேயே வெளிப்படுத்தத் தொடங்கினர். இதனை ஆழியாள் கூறுகையில்,*

*“அதிகார ஆதிக்க மமதைகளுக்கு எதிராகக் கொப்பளிக்கும் கோபங்களும், வெடித்துக் கிளம்பும் அழுகைகளும் தங்களுக்கான மொழியைக் கண்டுபிடிக்கும் அவஸ்தையும் மௌனத்துக்குள் ஆழ்ந்துபோக என பன்முக மனநிலைகளில் ஊடுபாவிக் கொண்ட எழுத்துகள் வெளிவரத் துவங்கியுள்ளன.” (ஆழியாள், உரைத்துப்பேச, 2020, ப : 32) என்கிறார்.*

*ஆண் என்கிற தன் முனைப்பு*

*காலங்காலமாகக் கற்பிக்கப்பட்டுவரும் மரபுகள் கொடுத்து வைத்துள்ள சலுகைகளாலும், சமூக அமைப்பின் அதிகார விளைவுகளாலும், தன்னைவிட மிஞ்சிப் பெண் மேலோங்கக்கூடாது என்ற அச்சத்தாலும் ஆண் என்கிற தன்முனைப்பு பெண் மீது உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பாய்கிறது. பெண் மீதான வன்முறையானது பெண்களுக்கு எதிராய் ஆடவர் செலுத்தும் அதிகாரமாகும்.*

*‘தகனம்’ நாவலில் சின்ராசு தனது முறைப்பெண்ணான சின்னப்பொண்ணைக் காதலிக்கிறான். இதனை அறிந்த அரசியல்வாதி அதனைத் தடுக்க முற்படுகிறான். அதற்காக சின்ராசிடம் ‘நீ பிடிகுடுக்காத, கல்யாணம் கூடக் கணக்குப் போட்டுத்தான் பண்ண வேண்டும். எதைக் கட்டினால் ‘லாபமாயிருக்குமோ, தாலியக் கைல எடுக்கணும்’ என்று ஆசிரியர் கூறுவது குறிப்பிடத்தக்கது.*

*“இரண்டாம் ஜாமங்களின் கதை” நாவலில் கரீம் வேலைக்காரியான மாரியாயிடம் தொடர்பு வைத்திருப்பதால் அவளிடம் கருத்தடை செய்ய வற்புறுத்துகிறான். கரீமின் மேல் இருக்கும் ஆசையை வைத்து பெரிய எதிர்பார்ப்புகளை வளர்த்துக் கொள்வதை அவன் மனம் ஏற்கவில்லை என்பதையும் எடுத்துக் கூறுகிறான். பின்பு அதற்கு அவள் ஒத்துக்கொள்கிறாள். காலம் செல்லச் செல்ல அவளது தனிமையை உணர்ந்து வருந்துகிறாள்.*

*இங்கு ஆணைப் பொறுத்தவரை கட்டுப்பாடு என்பது அவனது உடமைக்குப் பாதுகாப்பு வழங்கும் விதத்தில் அமைகிறது. இனப்பெருக்கமும் கூட அந்தப் பாதுகாப்புணர்விலிருந்தே நிர்ணயிக்கப்படுகிறது. இதில் பெண்ணின் மன உணர்வை ஆண் உணரவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.*

*“யாரும் யாருடனும் இல்லை” நாவலில் சுப்பு என்ற உடல் ஊனமுற்ற பெண்ணை வாயில் துண்டுத்துணியைத் திணித்து தோட்ட வேலைக்காரனான முத்தையா வன்புணர்வு கொள்கிறான். இதற்கு மறுத்த சுப்புவை ‘நொண்டிக் கழுதைக்கென்னடி நொரயாட்டம்” என்று கூறி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்கிறான். இதனால் அவள் உணர்வற்ற நிலை அடைவதை உமாமகேஸ்வரி தன் நாவலில் சுட்டிக்காட்டுகிறார்.*

*பெண்ணின் ஊனத்தைப் பொருட்படுத்தி அவளின் இயலாமையை உணர்ந்து தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்தும் ஆணின் மனநிலையை உணர்த்துகிறார் ஆசிரியர். இதனால் பெண் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் பெரிதும் பாதிக்கப்பட்டுத் துன்பப்படுகிறாள். இதுவும் ஒருவகையில் ஆண் என்கிற தன்முனைப்பாகவே கொள்ளலாம்.*

*இளம் விதவையர்*

*தமிழில் சமூக நாவல்கள் எழுதத் தொடங்கிய காலகட்டத்தில் குழந்தை மணக்கொடுமைகளும் விதவையர்க்கு இழைக்கப்படும் தீங்குகளும் சமுதாயத்தில் மலிந்திருந்தமையால் தொடக்ககாலத்தில் எழுதப்பட்ட நாவல்களிலிருந்தே இப்பிரச்சினைகள் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.*

*பெண்கள் கல்வியறிவு பெற்று வேலைக்குச் செல்லத் தொடங்கிய பிறகும் மேற்குறித்த சிக்கல்கள் கூர்மழுங்கிப் போயிருக்கின்றனவே அன்றி முழுமையாக மாறவில்லை எனலாம். ஆய்வுக்குரிய குழந்தைப் பருவ விதவையர்களின் மனச்சிக்கலைச் சித்தரிக்கின்றன. படைப்பாளிகளின் படைப்புகளில் இடம்பெறும் விதவையர் மறுமணம் செய்தவரும், மறுமணம் செய்யாதவரும் என இருநிலைகளில் காணப்படுகின்றனர். இது குறித்து,*

*"இழப்பு ஆணுடையதாக இருக்கையில் அவனுக்கு மறுமண வாய்ப்பு மறுக்கப்படவில்லை. துணையை இழப்பவள் பெண்ணாக அமைந்துவிட்டாலோ அவளது எதிர்காலமே இருட்டடிப்புச் செய்யப்பட்டது. தன் கணவனின் முகத்தைக்கூடச் சரியாகப் பார்த்திராத ஐந்து வயது நிரம்பிய குழந்தைப் பெண்ணாயினும் காலமெல்லாம் விதவை என்ற பட்டத்துடன் அவள் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது." (இசக்கியம்மாள், பெண்மனச்சிக்கல்கள், 2009, ப : 236) என்ற சமூகவியலறிஞர் கருத்தை ஆ. இசக்கியம்மாள் எடுத்துரைக்கின்றார். இப்பெண்கள் குழந்தைப் பருவத்தில் கணவனை இழந்தாலும் அவர்கள் மீது சமூகம் இரக்கம் காட்டுவதில்லை. இதன் காரணமாக அவர் தம் வாழ்வியல் சிக்கலுக்கும் மன உளைச்சலுக்கும் காரணமாகின்றனர்.*

*"யாரும் யாருடனும் இல்லை" நாவலில் பெண்ணின் திருமணவயதானது 12 - 16 என வரையறுக்கப்பட்டுள்ளதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். 'தவ்வை' நாவலில் தவ்வைக்குப் பதிமூன்று வயதாகும்போதே ராமநாதனுடன் திருமணம் செய்து வைக்கின்றனர். இந்த இருநாவல்களிலும் கூறப்பட்டுள்ள திருமணங்கள் நிலையான வாழ்வைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

*இளம் விதவையர் சிலர் தமது பாதுகாப்பின் பொருட்டோ, பொருளாதாரத் தேவையின் பொருட்டோ, தம் குழந்தைகளின் பாதுகாப்பின் பொருட்டோ மறைமுகமாக நெறிதவறியவர்கள்.*

*"இரண்டாம் ஜாமங்களின் கதை" நாவலில் காணப்படும் மிகுதியான பெண் பாத்திரங்களும், இளம் விதவையர்களாகவே திகழ்கின்றனர். சைனு, பீவி, ஆமின், வஹிதா, பாத்திமா என்பவர்கள் திருமணத்தின்போது 10, 12, 15 என்ற வயது வரம்புடையவர்களாக மட்டுமல்லாது வயதுக்கு வராத பெண்களாகவே இருக்கின்றனர். இதில் பீவி திருமணமாகி பதினைந்து நாட்களுக்குப் பிறகு பருவமடைவது குறிப்பிடத்தக்கது. இப்பெண்களின் கணவர் நோய்வாய்ப்பட்டோ, விபத்துக்குள்ளாகியோ மரணம் எய்துவதாலும், மலடி என்று 'முத்தலாக்' கொடுப்பதாலும் இவ்விளம் பெண்கள் விதவையர் என்ற பட்டத்தைப் பெற்றுத் தாய்வீடு திரும்புகின்றனர். இவர்களில் பெரும்பாலான பெண்கள் இருட்டறையில் இருந்து வெளிச்சத்திற்கு வராமலேயே தனது வாழ்வை முடித்துக் கொள்கின்றனர். அதை விடுத்து, பெண், உணர்வுகளை வெளிப்படுத்தவோ, செயற்படவோ செய்தார்கள் எனில் அவர்களுக்குக் குடும்பத்தின் பெயராலும் சமூகத்தின் பெயராலும் அளிக்கப்படும் தண்டனை என்பது உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் மட்டுமல்லாது உயிரைப் பலியிடும் நிலைமைக்கும் ஆளாக்கிவிடுகின்றது.*

*கணவனை இழந்த பெண்கள் தம்மை விரும்பும் மற்றொரு ஆடவனை மணந்துகொள்ள விரும்பினாலும் அவளுக்கு மருந்தாக திணிக்கப்பட்டுள்ள ஒடுக்கு முறைகள் உளச்சிக்கல்களை ஏற்படுத்தி பயமூட்டுகின்றன.*

*'கல்மரம்' நாவலில் கன்னியம்மாள் சிறுவயதிலேயே குமார் என்பவனுக்கு வாழ்க்கைப்பட்டு, புகுந்த வீட்டின் கொடுமையைத் தாங்க முடியாமல் தாய்வீடு திரும்புகிறாள். 'தகனம்' நாவலில் கோவிந்தம்மாளின் கணவன் மனப்பிரழ்வின் காரணமாக வீட்டைவிட்டுச் சென்றுவிடுகிறான். தனது மூன்று பெண் குழந்தைகளையும் வளர்த்துக்கொள்ள முடியாமல் கஷ்டப்படுகிறாள். பின்பு துப்புரவு தொழில் செய்தும், தனது மூத்த மகள் சின்னப்பெண்ணைக் குலத்தொழிலான உடல் தகனம் செய்யும் தொழிலுக்கு அனுப்பியும் குடும்பத்தை ஓட்டுகின்றாள். இறுதியில் ஒரு பெருமழையின் போது கோவிந்தம்மாள் பாதாள சாக்கடையில் விழுந்து இறந்து விடுகிறாள். இதனால் அவள் குடும்பம் அனாதையாகின்ற நிலையைக் காணமுடிகிறது. இதில்*

பெண்கள் எவரும் ஆணை எதிர்த்து நிற்க முன்வராமல் ஒதுங்கியும், மனச்சிக்கல்களுக்கு ஆளாகியும் வாழ்கின்றனர். இவர்களில் துணிச்சலோடு வீட்டிற்குள் அடங்கி ஒடுங்காமல் தனது பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்ற வெளியே வருபவர்களும், உணர்வுகளை வெளிப்படுத்த முயன்றவர்களும் சமுதாயத்தில் பெண் என்ற அடையாளத்தாலேயே ஒடுக்கப்பட்ட நிலையையும் காண முடிகிறது.

தாய் மனச்சிக்கல்

உறவுகளிலே தலைசிறந்த உறவாகத் தாய் உறவு தான் காணப்படுகிறது. தாய் உறவிலிருந்துதான் மானிட உறவுகள் பல பரிமாணங்களுடன் விரிவடைகின்றன என்பது உண்மை. இத்தகைய தாய் உறவு காலப்போக்கில் சிக்கல் நிறைந்த உறவாகிவிடுகின்றன. இதில் மிகுதியாகப் பாதிக்கப்படுவது தாயாகத்தான் காணப்படுகிறாள்.

மகனால் தாய்க்கு ஏற்படும் மனச்சிக்கலுக்கு மகனின் பொறுப்பின்மையும், தீய பழக்கங்களும் காரணிகளாகின்றன. மகனின் பொறுப்பற்ற செயலால் குடும்பம் சிதைகின்ற நிலையையும், தீய பழக்கங்களான மது அருந்துதல், திருடுதல் போன்றவற்றின் விளைவுகளால் தாயின் மனம் சோர்வடைந்து படுக்கையாகிவிடும் நிலையையும் காணமுடிகிறது.

இளம் வயதில் திருமணமாகி மனைவி, குழந்தை, என வாழவேண்டிய மகன் திருமண வாழ்வை விடுத்து, வீட்டிற்கு வராமல் ஊர்சுற்றித்திரிவதை நினைத்து வருந்தும் தாயின் மனஉணர்வை ‘யாரும் யாருடனும் இல்லை’ நாவலில் உமாமகேஸ்வரி சுட்டிக்காட்டுகின்றார். வாழ்க்கையில் இறுதிவரை ஊன்றுகோலாக இருக்க வேண்டிய தனது கடைசி மகன் குணா, குடும்பத்தைவிட்டு விலகுவதை எண்ணி தாய் அன்னம்மாள் வருந்துகிறாள். அதோடு அன்னம்மாளின் இரண்டாவது மகன் கோபால் திருமணமாகியும் குடும்பத்தைச் சீராகப் போற்றத் தெரியாமல் மதுவிற்கு அடிமையாகி வாழ்கின்ற நிலையை நாவலில் காணமுடிகிறது. இதே போன்று ‘கல்மரம்’ நாவலில் ஆதிலட்சுமியின் மகன் காசி கதாபாத்திரமும் அமைந்துள்ளது. கட்டிடத்தொழில் விபத்தில் கணவனை இழந்த ஆதிலட்சுமி, தனது மகனை வேலைக்குச் செல்லவிடாமல் வீட்டிலேயே வைத்து வளர்க்கிறாள். கணவனது நிலமை மகன் காசிக்கு வரக்கூடாது என்ற பயம் அவள் மனதை அலட்டியது. வேலை செய்து சேமித்து வைத்திருக்கும் பணத்தைத் திருடி காசி மது அருந்துவதைக் கண்ட ஆதிலட்சுமி ஏற்றுக்கொள்ள முடியாமல் ஆவேசமுற்று புலம்புகிறாள்.

தனது வறுமையைப் பொருட்படுத்தாமல், மகனைச் செல்லமாக வளர்த்த தாய் மகனை நினைத்து மனதில் கோட்டை கட்டுகிறாள். திடீரென்று அவன் செயல்பாடுகளால் மனம் நொந்து வருந்திப் புலம்புகிறாள். குணவனை இழந்த தனது குடும்பத்தைப் பாதுகாக்க அவள் எடுத்த முயற்சியானது எதிர்பாரா நிலைக்குக் கொண்டு செல்வதால் அவள் மனதளவிலும் உடலளவிலும் பாதிப்பிற்குள்ளாகும் நிலையைக் காணலாம். தந்தையின் பாசமின்மையும் புறக்கணிப்பும் பிற பெண் தொடர்பும் மகனைப் போதைப் பழக்கத்திற்கு அடிமையாக்குகிறது. இதனால் தாய் மன உளைச்சல் அடைகின்றாள். இதனை ‘முற்பகல் ராஜ்ஜியம்’ நாவலில் ஆண்டாள் பிரியதர்ஷினி விளக்கிக்காட்டுகிறார்.

சிவராமன் தனது மனைவியையும் இரண்டு குழந்தைகளையும் விடுத்து இந்து என்ற பெண்ணோடு தொடர்பு வைத்திருக்கிறான். இதனை அறிந்த அவன் மகன் கணேஷ் மது அருந்தியபடி வீட்டிற்குச் செல்கிறான். இதனைக் கண்ட அவன் தாய் அவனிடம் எதிர்த்து கேள்வி கேட்கிறாள். அதற்கு ‘உம்புருஷனைப் பார்த்து கேக்க வேண்டியது தானே, கேட்டிருந்தா இப்படி ஆயிருக்குமா? நான் குடிச்சிருப்பேனா?’’ என வினவுகிறான்.

ஒரு குடும்பத்தில் தலைவனின் பொறுப்புணர்வே அக்குடும்பத்தின் வளர்ச்சி எனலாம். பொறுப்பற்ற தந்தையின் செயல்பாடுகளால் அதனைக் கண்டு வளரும் குழந்தைகளும் பாதிக்கப்படுகின்றனர். தந்தையின் காரணமாக அவமானப்படும் குழந்தைகள் தீய பழக்கங்களுக்கு ஆளாகி குடும்பம் சீர்குலைகின்றது அதோடு குடும்பத்தில் தாயானவள் ஒருபுறம் கணவனாலும் மறுபுறம் மகனாலும் வருந்தி மன உளைச்சலுக்கு ஆட்படுகிறாள்.

தொகுப்புரை

பெண்கள் எதிர்கொள்ளும் மனச்சிக்கல்கள் நீக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திலும் ஆண் மனதில் பெண் உரிமைச் சிந்தனையை வளர்த்தெடுக்கும் விதத்திலும் பெண்

*எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளைப் படைத்துள்ளனர். சமூக மதிப்பீடுகளைச் சமத்துவ மதிப்பீடுகளாக உருவாக்கிச் செயல்படுத்துதலே பெண்ணுரிமைக்கு எதிரான அனைத்து சமூக மற்றும் குடும்பச் சிக்கல்களுக்குத் தீர்வாக அமையும் என்பதை ஒவ்வொரு நாவல்களும் விளக்குகின்றன.*

*பார்வை நூற்கள்*


1. *ஆழியா, உரத்துப்பேச, மறு பதிப்பகம், சென்னை – 2000.*
2. *இசக்கியம்மாள், பெண் மனச்சிக்கல்கள், காவ்யா பதிப்பகம், சென்னை – 2009.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********